# வியாபாரியின் மனைவி

கலகலவெனச் சிரிப்பொலியைச் செவியுற்றதும், சாரநாதன் வாசலில் தயங்கி நின்றான். 'ஏன் சிரிக்கிறாள் அவள்?'

"ஏண்டி சிரிக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டு தவிக்கிறாளே, அந்த மற்றவளின் துடிப்புத்தான் சாரநாதனுக்கும் இருந்தது.

"ஒன்றும் இல்லை; எதையோ நினைத்துக் கொண்டுவிட்டேன்" என்றுதான் பங்கஜம் சொன்னாளே தவிர, சிரிப்பின் காரணத்தைச் சொல்லவே இல்லை.

பங்கஜத்துடன் பேசிக்கொண்டிருந்த மற்றவள் யார்? 'கல்யாணிதான்' என்று ஊகம் செய்தான் சாரநாதன். 'டி' போட்டு உரிமையுடன் பேசக்கூடிய சிநேகிதி அவளாகத்தான் இருக்கவேண்டும்.

கல்யாணியின் குரல் வீம்பு கூடிக்கொண்டு ஒலித்தது மறுகணம். "பிரமாத ரகசியமண்டி! சொல்லாவிட்டால் வேண்டாமே!" என்று அவள் சிணுங்குவதைப் பங்கஜம் லட்சியம் செய்யவில்லை. மீண்டும் எக்களிப்புடன் சிரிப்புப் பூக்களை உதிர்த்தாள்.

சாரநாதன் புன்முறுவல் பூத்தான். திடீரென்று ஒரு பிரமை தட்டியது. போன வருஷம் இப்படி நின்ற காட்சி அவன் நினைவுக்கு வந்தது.

வேட்டகத்தின் வெளிவாசற்படியிலே எத்தனை நேரம் நிற்பது? ஆனால் பங்கஜமோ சிரிப்பின் விளக்கத்தைச் சொல்லாமல் ஏய்க்கிறாளே!

இதற்குள் பின்புறத்திலிருந்து குரல் கேட்டது.

"ஏன் மாப்பிள்ளை, நிற்கிறீர்களே! உள்ளே போங்களேன்!" என்று சொல்லிக்கொண்டே வந்தார் மாமனார். கையில் தினசரித் தாளுடன் அடுத்தகத்திலிருந்து வந்து வீட்டுக்குள் தன்னை உந்தும் மாமனார்மேல் கோபம் வந்தது அவனுக்கு. ஏனென்றால் பங்கஜம் எட்டிப் பார்த்துவிட்டுப் போனாள். இனிமேல் ஏது விளக்கம்?

சாரநாதன் உள்ளே போய், தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையில் உட்கார்ந்தான். மாமனார் மீது ஏற்பட்ட கோபம், கல்யாணியின்மீது நன்றியாக மாறிவிட்டது.

கல்யாணி விடாப்பிடியாகப் பங்கஜத்தைத் துளைத்தாள். "கேட்டதற்குப் பதில் சொல்லாமல் சிரிப்பு என்னடி? இதுதானா நீ கல்கத்தாவில் குடித்தனம் செய்துவிட்டுக் கற்றுக் கொண்ட ஒழுங்கு?" என்று பங்கஜத்தின் இங்கிதமின்மையைத் தாக்கினாள். பங்கஜம் சளைக்காமலே தொடர்ந்தாள்.

"ஒரு கதை நினைவு வந்தது, கல்யாணி. நாட்டுப் பெண் தேட ஒரு செட்டி, கடை வீதியெல்லாம் நடை போட்டானாம். சில கடைகளில் பெண்கள்தாம் வியாபாரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அந்த நாளில் காசுக்குப் பதில் அரிசி கொடுத்துப் பண்டம் வாங்குவார்களாம். சில பேர் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அரிசியும் எண்ணெயும் சரிக்குச் சரி என்று பேரம். ரொம்பப் பேர் ஒப்புக்கொள்ளாத பேரம் அது. ஒரு கடைக்காரப் பெண் ஒப்புக்கொண்டாளாம். ஒரு தாம்பாளத்தில் கும்மாச்சியாக அரிசி அளந்து வாங்கிக் கொட்டிக் கொண்டுவிட்டு, அதே தாம்பளத்தில் எண்ணெயை ஊற்றிக் கொடுத்துவிட்டாள்! எப்படிச் சாமர்த்தியம்? அந்தப் பெண்ணை நாட்டுப் பெண்ணாக தேர்ந்தெடுத்தான் செட்டி" என்று ஒரு கதை சொல்லி மழுப்பினாள் பங்கஜம். கல்யாணி ஏமாந்து போகாமல், "நான் என்ன கேட்டேன்? 'அகத்துக்காரர் எத்தனை புடைவைகளை அள்ளிக்கொண்டு

வந்திருக்கிறார்?" என்று கேட்டால் சிரித்துவிட்டு ஏதோ கதை அளக்கிறாயே!" என்று மீண்டும் கேட்டாள்.

பங்கஜத்தின் பதில் என்ன? "நான் கதையை நினைத்துக் கொண்டுதானே சிரித்தேன்? உன் கேள்விக்காகவா? நீ நம்பாவிட்டால் என்ன செய்ய? எத்தனை புடைவைகளை அள்ளிக்கொடுக்க முடியும்? பார், அந்தப் புடைவைகளில் ஏதாவது இஷ்டமானால், என் நினைவாக உன் அம்மா வாங்கித் தரட்டும்" என்று சொல்லிக்கொண்டே பங்கஜம் பீரோவைத் திறந்தாள்.

பிறகு என்ன நடக்கும்? சாரநாதனுக்குத் தெரியும். கல்யாணியிடம் புடைவைகளைக் கொடுத்து அனுப்பினாள் பங்கஜம். கல்யாணி தன் பெற்றோரிடம் என்ன வாது செய்தாளோ?

"பணம் நாளைக்குத் தரலாமோன்னோ?" என்று கேட்டுவிட்டுக் கல்யாணி ஒரு புடைவை வாங்கிக்கொண்டாள். பங்கஜம் மெல்ல வந்தாள். கல்யாணியின் செவியில்படும்படி உரக்கப் பேசினாள் கணவனோடு.

"ஆசைப்பட்டாள், கொடுத்தேன். எனக்கு அங்கே வந்ததும் இதே போல எடுத்துத் தரவேணும். பொங்கலுக்குள்ளே புதுச் சரக்கு வருமே!" என்று சொல்லிவிட்டுக் கல்யாணியுடன் உரையாடப் போய்விட்டாள்.

"ஆளுக்குத் தகுந்த வேஷம்! இடத்திற்கு ஏற்ற பேச்சு!" என்று சாரநாதன் பிரமித்துப் பூரித்தான்.

ஆறு மாதங்களுக்கு முன்பு கல்கத்தாவிலே அவன் கேட்டதும் கண்டதும் முற்றும் மாறுபட்டிருந்தன. பலன் மட்டுமே அதேதான்.

"நீ உடுத்துக்கொண்டிருக்கும் புடைவையை எங்கே வாங்கினாய்?" என்று கேட்டது ஒரு புதுக்குரல்.

"வேறே எங்கே வாங்குகிறது? எங்கள் கடையில் தான்" என்று பங்கஜம் எடுப்பாகச் சொன்னாள்.

"ஓஹோ, மறந்துவிட்டேன்! புடைவை வெறுமனே கிடைத்துவிடும் உனக்கு!" என்று பேசியது மற்றொருகுரல்.

"உம், வெறுமனே கிடைக்குமா? விலை அறுபத்தொன்றேகால்? எங்காத்துக்காரர் என்னமோ வெறுமனே கிடைக்கிற மாதிரிதான் எனக்குப் புடைவை தருகிறார். எனக்குப் புடைவைக்கு அவசரமே இல்லை என்று சொன்னால் கோபித்துக்கொள்கிறார். கல்யாணமான புதிதில் வாங்கித் தந்த புடைவைகளைத் தினமும் நனைத்து உடுத்துகிறேன்; புதுக் சுருக்கு அழியவில்லை. போன மாசம் மறுபடியும் மூன்று புடைவையைக் கொடுத்துவிட்டார். சாயம் மாறாமல், கல்லுக் கல்லாயிருக்கும் அந்தப் புடைவைகளே இன்னும் ஒரு வருஷம் தாங்கும். இந்த ரகத்தில் அப்புறம் மிஞ்சாது என்று பலவந்தப்படுத்தினார்" என்று பங்கஜம் சொன்னதுமே, "இருக்கிறதா இன்னும்? பாரேன்!" எனத் துடித்தாள் மற்றவள். "இருக்கிறதோ என்னமோ? இதே மாதிரி வரவழையுங்கள், ரொம்பப் பேர் வாங்குவார்கள் என்று சொல்லிக் கொண்டே இருந்தேன். என்ன செய்தாரோ? நான் உடுத்திருக்கிற மாதிரியில் இருக்குமா என்பது சந்தேகந்தான். இருந்தால் உங்கள் அதிருஷ்டம்! எத்தனை நனைப்பு ஆச்சு இது!" என்று பங்கஜம் பேசி முடித்துக் கடைக்குள் நுழைந்தாள், மற்றவர்களோடு. வாசற்புறத்துப் பெரிய ஹால்தான் புடைவைக் கடை. அங்கே வந்தாள். எட்டு மாதங்களுக்கு முன்பு வந்திருந்த சரக்கைக் காட்டி, "வந்துடுத்து போலிருக்கு இதே ரகம்!" என்று ஆச்சரியப்படுபவளைப் போல அபிநயித்து, "அடடா, பதினெட்டு ரூபாய்தானா?" என்று திகைப்புக்காட்டிக் கணவனிடம் வந்து, "இது நிஜந்தானா?" என்றாள்.

"நிஜமா உன் வாய்ச் சரக்கும் கற்பனைச் சரடும்?" என்று சாரநாதன் சிரித்துக் கொண்டே சில பழைய சம்பவங்களை எண்ணிக்கொண்டிருக்கையிலே.....

பங்கஜம், புடைவை விற்ற பணத்தை எண்ணி எடுத்துக் கொண்டு வந்து அவன் கையிலே வைத்தாள்.

அந்தச் சம்பவங்கள் நடந்து சில மாதங்கள்தாம் ஆயின. சாரநாதன் எத்தனை பெரிய மாறுதல்களைக் கண்டுவிட்டான், அந்தக் குறுகிய காலத்திற்குள்?

கல்கத்தா குடித்தனமும், அதற்கு முன்பு நடந்த கடிதப் போக்குவரவும் சாரநாதனுக்கு மறக்க முடியாத இன்பக் களஞ்சியம். அதுவே அவன் மனைவியின் இன்பச் சுனை; அவர்கள் உறவின் புதைபொருள். உள்ளத்தில் ஆழப்பதிந்த அந்தப் பழம் பெரும் அநுபவங்களைச் சாரநாதன் எப்போதும் சுவையுடன் நினைவு கூர்வான். கற்கண்டு போலக் கருதி அடக்கிக்கொண்டு அநுபவிப்பான்.

ஓராண்டுக்கு முன்பு, இதே வீட்டின் வாசலிலே தயங்கி நின்றானே - அன்று தொடங்கிய பந்தம்!

கலகலவெனச் சிரிப்பைச் செவியுற்று அன்றும் தயங்கிக்கொண்டிருந்தான். அவன் தேடி வந்த வீட்டுக்குள்ளே கும்மாளம் போடுகிறவர்கள் பெண்கள்தாம் என்று தெரிந்து கொண்டும், "ஸார்!" என்று அழைத்தான். பெண்களின் கூட்டந்தானே அவனுடைய அலுவலுக்கு ஊட்டம்?

இளம் பெண் ஒருத்தி ஓடி வந்து எட்டிப் பார்த்துவிட்டு ஓட்டமாய் மறைந்து சென்றாள். "யாரோ மூட்டையும் முடிச்சுமாய் விருந்தாளி போலிருக்குடி!" என்ற சொற்கள் அவன் செவிகளிலே விழுந்தன.

மற்றோர் இளம் பெண் தயக்கத்தோடு எட்டிப் பார்த்தாள். இருவரும் அக்காள் தங்கைகளாக இருக்க முடியாது. ஒருத்தி, முதலில் வந்தவள், நல்ல வெளுப்பு நிற மேனியும் குறுகிய முகமும் மெல்லிய உடலமைப்பும் உள்ளவள்; மூக்குக் கண்ணாடி அழகி. தயங்கிக்கொண்டு எட்டிப் பார்க்கும் பெண், சுமாரான சிவந்த நிறம்; கட்டான உடல்; உருண்டை முகம்.

முதலில் ரிக்ஷாவையும், அதில் இருக்கும் பெட்டியையும் அவள் பார்த்தாள். பிறகுதான் சாரநாதனைப் பார்த்தாள். வெளியே வந்தாள். "உள்ளே வரலாமே! வாங்கோளேன்!" என்று அழைத்துவிட்டாள். வந்தாயிற்று விருந்தாளி. வீடுதேடி வந்தவரை வரவேற்கத்தானே வேண்டும்? "ஸார் இருக்கிறாரா? பாங்க் மானேஜர் கிருஷ்ணசாமி அனுப்பி, வந்திருக்கிறேன் நான்" என்று சொல்லிவிட்டுத் தயங்கிய சாரநாதனுக்கு, அந்தப் பெண்ணின் மறுமொழி தெம்பு அளித்தது.

"அப்பா வெளியில் போயிருக்கிறார்; வந்துவிடுவார். நீங்கள் உள்ளே வரலாமே!" என்று சொல்லிவிட்டு, ரிக்ஷாக்காரனைப் பார்த்துச் சாமான்களை எடுத்து வருமாறு உத்தரவிட்டாள்.

"நான் ரெயிலுக்குப் போகிறேன்; ஹோல்டாலை இறக்கவேண்டாம்!" என்று தடுத்துவிட்டுப் பெரிய பெட்டியை மட்டும் இறக்கிக் கொண்டு வீட்டு வாசற்படி ஏறினான் சாரநாதன்.

"பெட்டி மட்டும் எதற்கு?" என்று மூக்குக் கண்ணாடி அழகி மெல்லக் கேட்டதைச் சாரநாதன் கவனிக்காமல் இல்லை. பெட்டியைத் திறக்கத் தொடங்கிவிட்டான். "நான் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறேன். நேற்றே வந்தேன். கிருஷ்ணசாமி வீட்டில் இறங்கிக் கொண்டு, நம்ம தமிழர்கள் சில பேரைப் பார்த்தேன். உங்கள் வீட்டிலும் பார்க்கலாமே என்று வந்தேன். தீபாவளி வருகிறதே!" என்று சொல்லிவிட்டுப் பெட்டியில் இருந்த சரக்கை வெளியில் எடுத்து வைத்தான்.

"புடைவைகளா?" என்றாள் மூக்குக் கண்ணாடி அழகி. அம்மாடியோ, பட்டுப் புடவைகளா?" என்று கூவிவிட்டாள் வரவேற்ற சுந்தரி.

"அம்மாவைக் கூப்பிடுங்களேன்" என்று நிதானமாகச் சாரநாதன் சொன்னான்.

"அம்மாவும் வெளியிலே போயிருக்கிறாளே!" என்று தவித்தாள் பங்கஜம். "நான் எங்கம்மாவைக் கூட்டிகொண்டுவருகிறேன்!" என்று பறந்தாள் கண்ணாடிக்காரி கல்யாணி.

பங்கஜம் இருப்புக் கொள்ளாமல் தடுமாறினாள். பாயை எடுத்துப் போட்டாள். "தேவை இல்லை; போய் வாருங்கள்" என்று விரட்டத் தயக்கமாக இருந்தது. "இந்த நாளில் தீபாவளிக்குப் பட்டுப் புடைவை வாங்குகிறது என்றால் லேசா?" என்று கேட்டுவிட்டு அங்கிருந்து மறைந்தாள்.

"நல்ல நல்ல பட்டுப் புடைவைகள் வந்திருக்கு மாமி, வாங்கோளேன்!" என்று அவள் யாரையோ கூப்பிடும் குரல் கேட்டது. பிறகு வாசலுக்குப் போனாள். ஹிந்தியிலே, "பாயீ! ஆயியே!" என்று அழைத்துச் சமாசாரம் சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டு வந்தாள்.

இதற்குள் கல்யாணி தன் தாயுடன் வந்து சேர்ந்தாள். "கல்யாணி, மிஸஸ் இஸ்ரேலைக் கூட்டிக் கொண்டு வாயேன். கிறிஸ்துமஸ் வருகிறதே, வாங்குவார்களோ என்னவோ!" என்று சொல்லிக் கல்யாணியை அனுப்பிவிட்டு, பங்கஜம் புடைவை வியாபாரி இருக்குமிடம் வந்தாள். சில புடைவைகளை அவளும், கல்யாணியின் தாயும் பரிசீலனை செய்து விலை விவரங்கள் கேட்கும் சமயம், நான்கைந்து பேர் பெண்கள் கூடிவிட்டார்கள். பங்கஜம் விலகிக்கொண்டு, "பாருங்கள் புடைவைகளை!" என்று ஊக்கினாள். ஆனால் உள்ளூற அவளுக்குக் குழப்பம் ஏற்பட்டிருந்தது. புடைவை வாங்கும் எண்ணத்துடன் வந்த பேர் யாரும் இல்லை. பெட்டியைத் திறந்து கடையைப் பிரித்தபின் ஒரு புடைவை கூட வியாபாரம் ஆகவில்லை என்றால் ஒரு வியாபாரிக்கு எப்படி இருக்கும்? "தீபாவளிக்கு நூற்புடைவைகள் வாங்கியாச்சு! அவசியம் இல்லை!" என்று துணிவுடன் சொல்லியிருந்தால் பல சங்கடங்கள் குறைந்திருக்குமே என்று அங்கலாய்த்தாள் பங்கஜம். தாய் இருந்தால் சபலப்பட்டு வாங்கக் கூடும். தந்தை வந்தால் தாட்சிண்ணியம் இல்லாமல் எதையாவது சொல்லிவிடுவார். அம்மா இரவு எட்டு மணிக்குத்தான் வரக்கூடும். அதற்குள் தந்தை வந்துவிடுவார். கடைசியில் வியாபாரியை ஏமாற்றத்துடன் அனுப்புவதா?

புடைவைகளைப் பரீட்சை பார்த்துக்கொண்டிருந்த அம்மாமிகளைப் பார்த்தாள் கல்யாணி; புடைவைகளையும் வியாரியையும் மாறி மாறிப் பார்த்தபடி சும்மா இருந்தாள். "அந்தச் செக் டிசைன் புடைவை ஜோரா இருக்கு" என்று ஸ்ரீமதி ரோஸா இஸ்ரேல் அபிப்பிராயப்பட்டாள். "உங்களுக்கு 'சூட்' ஆகக்கூடிய புடைவைமேல் உங்கள் கண் விழுகிறது" என்று பங்கஜம் பதிலளித்தாள்.

அடுத்தகத்து மாமி ஒரு பச்சை நிறச் சேலையை ஆசையுடன் கையில் எடுத்து, "அம்மாடி, நூற்றிருபது!" என்று மலைத்தாள்.

"பச்சை நிறத்திற்கே விலை அதிகமாமே!" என்று பங்கஜம் கேட்டதும், சாரநாதன், "எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

வெட்கம் சூழ்ந்துகொண்டாலும் சமாளித்துக்கொண்டு, "நூற்புடைவையிலேயே பச்சைப் புடைவைக்கு விலை அதிகமாச்சே. சமீபத்தில்தான் இரண்டு புடைவை வாங்கினோம்!" என்று பங்கஜம்தெரிவித்துவிட்டு, "அம்மா வருகிறாளோ, பார்க்கிறேன்" என்று வாசலுக்குப் போய்விட்டாள்.

நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்ற கவலை வலுத்தது. ரிக்ஷாக்காரன் காத்திருக்கிறான். வியாபாரி ரெயிலுக்குப் போக நேரமாகிவிட்டால், கஷ்டம், நஷ்டம்

எல்லாம் சேருமே! இத்தனை பேரில் யாராவது புடைவை வாங்குவார்கள் என்ற நைப்பாசையுடன் ரெயிலைத் தவறவிட்டுவிடுவாரோ?

கல்யாணியின் குரல் செவியில் விழவே, உற்றுக் கவனித்தாள்.

"வாங்கு அம்மா; அந்த வாடாம்பரக்கலர் எனக்கு வேணும்!" என்று கல்யாணி வீம்பு செய்கிறாள். அப்பொழுது ஒரு புடைவை விற்பனை நிச்சயம். செல்லப் பெண், அவள் வீம்பு பலிக்குமே! துள்ளியது பங்கஜத்தின் உள்ளம்.

ஆனால் . . . இது என்ன? தாயின் மறுப்பும், மகளின் மௌனமும் அதிசயமாக இருக்கின்றனவே?

கல்யாணி பிடிவாதம் செய்யாவிட்டால் விற்பனை சுழிதான்.

விரைந்தாள் பங்கஜம்; கலகலவெனப் பேசி, தர்க்கிக்கும் மற்றவர்களைக் கவனிக்காமல், சேலைக்குவியலுக்கருகே போய் ஆராய்ந்து ஒரு புடவையை எடுத்தாள். "இந்தக் கலரில் கல்யாணி ஒரு நூல் புடவை கட்டிக்கொண்டிருந்தாளே, எப்படிப் பொருத்தமாய் இருந்தது!" என்று சொன்னாள்.

"வாங்கவே மாட்டாளாம் அம்மா!" என்று கல்யாணி முணுமுணுத்தாள்.

"பெண் பார்க்க வருகிறபோது இதைக் கட்டிக்கொள்ளவேணுமென்ற ஆசையாக்கும் உனக்கு!" என்று பங்கஜம் நையாண்டிச் செய்தாள்.

சட்டென பலன்! "கொண்டா அதை," என்று கேட்டு வாங்கிக்கொண்டாள் கல்யாணியின் தாய். "வீட்டில் கொண்டுபோய்க் காட்டி விட்டு வருகிறேன்" என்று அனுமதி கேட்டாள்.

"பேஷாகக் கொண்டு போங்கள்" என்று சாரநாதன் சொன்னான்.

"பணத்துடன் திரும்பிவாருங்கள்!" என்று பங்கஜம் கூவினாள். கூறிய மறுகணம் முகம் சிவக்க, கண்கள் அவனைக் கூர்ந்து பார்த்துத் தழைந்து போயின. "அம்மாவைக் காணோமே!" என்று வாசலுக்குப் போய்விட்டாள்.

'சம்மதம்' என்ற செய்தியுடன் கல்யாணியின் தாய் வந்தபோது, சாரநாதன் அதைச் சகஜமாக ஏற்றான். பங்கஜம் அகங்குளிர்ந்துவிட்டாள். ஒரு சிநேகிதி புடவை வாங்கிவிட்டாள் என்றதும், மற்றவர்களுக்கும் ஆசை கிளர்ந்தது. ஆனால் காசு புரளவேண்டாமா? கடைசியில் ஸ்ரீமதி ரோஸா ஒரு புடவையை வாங்கிக்கொண்டு விட்டாள்.

வியாபாரி சீக்கிரம் கிளம்பிப் போய்விடவேண்டும் என்றத் துடிப்பு, பங்கஜத்திற்கு. தந்தை வந்தால், "உங்களைத் தேடி வந்தேன்" என்று வியாபாரி சொல்ல, தந்தை வெட்டு ஒன்று துண்டு இரண்டென மறுமொழி சொல்லுவாரே என்ற பீதி. அவள் எது நடக்கக் கூடாது என்று நினைத்தாளோ அது நடந்துவிட்டது.

அவளுடைய தந்தை வந்தார்.

"நல்ல வேளை! என் மனைவி வீட்டில் இல்லாத சமயந்தான் வந்தீர்கள். அவளும் புடவைப் பித்து இல்லை; என் பெண்ணும் புடவைப் பித்து இல்லை. ஆனால் பெண்ணுக்குக் கல்யாணமானால் வேண்டுமே என்று இப்போதே வாங்கிவிடுவாள். கையில் பணம் இருக்கவேண்டாமா?" என்று சொன்னார் அவர்.

"கஷ்டப்படவேண்டாம், ஸார்! எப்பொழுது தேவையோ, கடிதம் எழுதினால் அனுப்புகிறோம். கிருஷ்ணசாமிக்கு ஒரு வார்த்தை சொன்னால் போதும். சரி, போய்வருகிறேன்!" என்று சாரநாதன் கிளம்பிவிட்டபோது, அவன் முகம் மலர்ந்திருந்தது.

இரண்டு நாட்கள், அந்த வட்டாரத்திலே புடவைப்பேச்சாகவே இருந்தது. மூன்றாம் நாள், புடவை வியாபாரியாக வந்த சாரநாதனைப்பற்றிய பேச்சாக மாறிவிட்டது. விற்பனையான இரண்டு புடவைகளுக்கும் இரண்டு ரசீதுகள் எழுதிகொடுத்த சாரநாதன் யார் என்று தெரிந்துபோயிற்று.

கல்கத்தாவில் கம்பெனி ஒன்றிலே கிளார்க்கு வேலை பார்த்துக்கொண்டே புடவை வியாபாரமும் கவனிக்கிறான் சாரநாதன் என்னும் விஷயம் மட்டும்தான் தெரிந்ததா? இல்லை, "பெண் பார்க்கவென்று தனியாக, தடபுடல் செய்துகொண்டு வரவில்லை நான். என் அலுவலைக் கவனிக்கும் சாக்கில் வந்தேன். வீடு தவறிவிட்டது. கல்யாணியின் பெற்றோரை நாடிப்போன நான் உங்கள் வீட்டில் புகுந்ததும் நன்மைக்குத் தான்" என்று எழுதி, பங்கஜத்தை ஏற்கும் தன் நோக்கத்தை அவளுடைய தந்தைக்குத் தெரிவித்தான் சாரநாதன்.

தகுதியறிந்து மனைவியைத் தேர்ந்தெடுத்த பெருமையுடன் சாரநாதன் எழுதிய கடிதங்கண்ட பிறகுதான், பங்கஜத்திற்குப் புதிர் புரிந்தது. வியாபாரியின் மனம், புடவை வாங்கப் பிடிவாதம் செய்த கல்யாணியின்பால் ஈடுபடாமல், புடவை விற்பனையானதற்கு ஒத்துழைத்த தன்னை நாடியது என்று விளங்கியது.

கல்யாணியை அனுப்பிவிட்டு வந்தாள் பங்கஜம். "செட்டி கதையை உன் சரக்குப் போலச் சொன்னாயே! யார் சரக்கு அந்தக் கதை?" என்றான் சாரநாதன்.

"இப்படி இல்லாவிட்டால் நம் ஜவுளிக்கடை சோபிக்குமா? சரக்கு விற்பனையாகுமா?"

"உன் கழுத்துச் சரடுதான் சோபிக்குமா?" என்று கேட்டுச் சிரித்து அவளை உற்றுப் பார்த்தான் அவன். இன்ப முறுவலுடன் பங்கஜம் தலைகவிழ்ந்தாள். ஆறுமாதங்கள் தன்னுடன் இல்லறம் நடத்திவிட்டு வந்த மனைவியா இப்படி முகம் சிவந்து போகிறாள்? சாரநாதனுக்கு மெய் சிலிர்த்தது.

**********

(கலைமகள், நவம்பர், 1952)